**STELLA MARIS COLLEGE (AUTONOMOUS), CHENNAI 600 086**
**(For candidates admitted during the academic year 2011 – 12)**

**SUBJECT CODE: 11TM/FC/KI33**

**B.A / B.Sc./ B.S.W./B.V.A. DEGREE EXAMINATION NOVEMBER 2012**
**FOUNDATION COURSE – TAMIL**
**THIRD SEMESTER**

| | | | |
|---|---|---|---|
| **COURSE** | **:** | **FOUNDATION – CORE** | |
| **PAPER** | **:** | **KAPPIYA ILAKKIYAM** | |
| **TIME** | **:** | **3 HOURS** | **MAX. MARKS: 100** |

## பகுதி - அ

**I** அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. **10 x 1=10**

1. மாசாத்து வாணிகன் மகன் யார்?
2. 'ஓதல் அந்தணர்க்கு ஒவ்வான்' - யார் கூற்று?
3. 'கனைவண்டார்க்கும் அலங்கலும் கலனும் ஏற்பத் தாங்கினான்' – அலங்கல், கலன் ஆகிய சொற்களின் பொருள் யாது?
4. 'காமுறும் இளமை செத்தும்' - இவ்வடியின் பொருள் யாது?
5. நச்சு அராவின் நடுக்குறு நோக்கினன் என்று கம்பர் யாரைக் குறிக்கின்றார் ?
6. 'இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்' – யார் கூற்று?
7. பெரியபுராணத்தை எழுதியவர் யார் ?
8. மனதால் இறைவனுக்குக் கோயில் கட்டியவர் யார் ?
9. தேம்பாவணியை இயற்றியவர் யார் ?
10. 'தருமமும் அறிவும் ஒழுக்கமும் பொறையும் தயவும் ஓர்' வடிவென எடுத்தவர் யார் ?

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக. **5 x 1= 5**

1. குடிமக்கள் காப்பியம்----------------------.
2. மணிமேகலை என்னும் காப்பியத்தை இயற்றியவர்---------------------.
3. சீவகசிந்தாமணியின் மற்றொரு பெயர்------------------------.
4. --------------------- வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
5. பெரியபுராணம்---------------------- சமயத்தைச் சார்ந்தது.

**III.** பொருத்துக. **5 x 1= 5**

| | | | |
|---|---|---|---|
| 1. | சிலப்பதிகாரம் | - | கம்பர் |
| 2. | சீவகசிந்தாமணி | - | உமறுப்புலவர் |
| 3. | கம்பராமாயணம் | - | இளங்கோவடிகள் |
| 4. | பெரியபுராணம் | - | திருத்தக்கதேவர் |
| 5. | சீறாப்புராணம் | - | சேக்கிழார் |

**IV.** எவையேனும் நான்கனுக்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **4 x 3 = 12**

1. 'கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று'
2. 'பேணுநர் இல்லோர் பிணி நடுக்குற்றோர் யாவரும் வருக'.
3. 'ஆற்றுமின், அருள் ஆருயிர் மாட்டெல்லாம்'
4. 'யாதினும் இனிய நண்ப இருத்தி ஈண்டு எம்மோடு' என்றான்.
5. 'என் உயிர் அனையாய் நீ!'
6. 'நீர் இங்கு எண்திசையோரும் ஏத்த எடுத்த ஆலயம் தான் யாது?'

## பகுதி - ஆ

**V.** எவையேனும் நான்கு வினாக்களுக்குச் செய்யுள் பகுதியிலிருந்து விடையளிக்க **4 x 9 = 36**

1. கண்ணகி பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்த திறத்தை விளக்குக.
2. ஆபுத்திரனின் வரலாற்றையும் அவனது அறப்பண்பனையும் புலப்படுத்துக.
3. சீவகனின் ஆட்சித்திறனைப் 'பூமகள் இலம்பகம்' எங்ஙனம் விளக்குகின்றது?
4. குகன், இராமன் மீது கொண்ட அன்பின் சிறப்பைப் புலப்படுத்துக.
5. பூசலார் நாயனாரின் பக்தித்திறத்தைப் பெரியபுராணத்தின் வழி விவரிக்க.
6. பாலைப் பகுதியை வளமான பகுதியாக மாற்ற முகமது நபி புரிந்த அற்புதத்தை விளக்குக.

**VI.** இலக்கிய வரலாறு – விடை தருக **1 x 10 = 10**

இரட்டைக் காப்பியங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

(அல்லது)

தமிழ்நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

## பகுதி - இ

**VII.** நாடகம் **1 x 12 = 12**

அன்னி மிஞிலி நாடகத்தின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

அறிவுடை நம்பியின் பண்புநலம் குறித்து எழுதுக.

**VIII.** கடிதம் **1 x 10 = 10**

உங்கள் பகுதியில் பழுதடைந்த சாலைகளைச் சீரமைத்துத் தர வேண்டி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

வேலை வாய்ப்பு வேண்டி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விண்ணப்பம் வரைக.

******